MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Existence of Foundation and Concept in Short Stories of Bharathiyar

DR. C. Markandan

Assistant Professor, Vels Institute of Science Technology & Advance Studies (VISTAS), Chennai, India

Manuscript ID : **MT116A0049**
Volume : **2**
Issue : **3**
Month : **September**
Year : **2022**
Received: 13.09.2022
Revised: 20.09.2022
Accepted: 27.09.2022
Published: 30.09.2022
Pages : 76-81
DOI: 10.5281/zenodo.7371812

ABSTRACT:

Generally common man gets an idea of poems when he hears the name of Bharathi as a poet across India. His directive skill of composing revolutionary poems in Tamil literature. Tamil society tries to find out his skills only in terms of Tamil poems. As result of this, the ideals of his conversation in the poems are being turned back from the front line. The Same society has different views on his short stories. His short stories gave a structure to short story in Tamil literature. Researchers has some negative opinions on this structure. The aim of this article would try to bring out how the concrete foundation and concepts his stories beyond all argumentative difference.

KEYWORDS:

Bharati, One sixth, Short story, Patriotism

பாரதி சிறுகதைகளின் களமும் கருத்தும்

முனைவர் செ. மார்க்கண்டன்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பாரதி என்ற பெயரைக் கேட்டவுடன் நம் நினைவில் வருபவை அவரின் கவிதைக் களமாகும். பாரதியின் இயங்குத் தளம் சற்று விரிவானது. கவிதையியல் நோக்கில் மட்டுமே தமிழ்ச் சமூகம் பாரதியை ஆராய்ந்து அடையாளம் காண முயல்கிறது. இதனால், அவரின் கதையாடல் வடிவத்தை பின்னுக்குத் தள்ளி வைக்கிறது. பாரதியின் கதைகள் குறித்து தமிழ்ச்சமூகம் பலவித கருத்தியலை எடுத்து வைக்கிறது. பாரதியின் சிறுகதைகள் தமிழ்ப் புனைவுச் சூழலில் முதல் சிறுகதைகள் என்ற வாதமும், அச்சிறுகதைகள் வடிவம், பொருண்மைத் தளத்தில் சிறுகதைகளே அல்ல, என்ற மற்றொரு வாதமும் நிலவி வருகிறது. இத்தகைய விவாதங்களைத் தாண்டி பாரதியின் கதைகள் எவற்றைக் களமாகவும், கருத்தியலாகவும் முன்னெடுக்கின்றன என்பதை ஆராயும் நோக்கமாகவே, இக்கட்டுரை களம் காண முயல்கிறது.

கருச்சொற்கள்

பாரதி, ஆறில் ஒரு பங்கு, சிறுகதை, தேசப்பற்று

முன்னுரை

ஒரு தேசத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வேண்டிய கடமை தனக்கும், தன் எழுத்திற்கும் இருப்பதாக உணர்ந்தவன் பாரதி. எதை எழுதினாலும் அதில் சமூக விடுதலையைப் புகுத்தியவன் பாரதி. ஆனால், தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பாரதிக்கான இடம் குறித்து கேள்வி எழுகிறது. கவிதை, வசனக்கவிதை, கட்டுரை, கதைகள், சிறுகதைகள், நாவல், கார்ட்டூன் என எல்லா வடிவங்களிலும் தன் சமூக வேட்கையை அலங்கரித்தவன் பாரதி. எதை எழுத வேண்டும் என்பதில் தெளிவான பார்வை கொண்டிருந்தவன் பாரதி. சுதேசியம், ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய எழுச்சி, சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு, பெண் விடுதலை போன்றவை அவனது எழுத்தின் சாரமாக அமைந்திருக்கின்றன. சிறுகதை வடிவத்திலும் இத்தகைய கருத்தியலையே மையப் பொருளாக படைத்தவர் பாரதி. 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறுகதையின் முகவுரை சாதிய ஒடுக்குமுறையைக் கேள்வி எழுப்புகிறது. இச்சிறுகதையின் முகவுரையில் பாரதி 'உழவுத் தொழில்' புரியும் 'பள்ளர்', 'பறையர்'

இவர்களை 'வைசியர்களாக' உயர்த்த முனையும் போக்கு கவனிக்கத்தக்கது. நால் வருணங்களில் சேர்க்காமல் 'பஞ்சமர்' என சமூகம் ஒதுக்கி வைத்திருந்த காலத்தில் பாரதி அவர்களை 'வைசியர்' என்று அடையாளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

'ஆறில் ஒரு பங்கு' சிறு கதையின் முன்னுரையில் எழுதுவதின் வழியே பாரதிக்கான சாதிய கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ளலாம். இருப்பினும் 'வைசியர்' என்ற கருத்தியலைக் கொண்டு நால் வர்ணத்தை உடைக்காமல், அல்லது வர்ணத்தை கேள்வி எழுப்பாமல் அப்படியே ஏற்றுக் கொள்ள முனைகிறாரா? என்ற கேள்வி எழுகிறது. கனகலிங்கத்தை 'பூணூல்' அணிவித்து 'இன்று முதல் நீ பிராமணன்' என்று கூறியதைப் போல, இங்கே 'வைசியன்' என்று உயர்த்தி தொழில்ரீதியான வகுப்புவாதத்தை கட்டுடைக்காமல் காப்பாற்றுகிறாரே என்ற எண்ணம் வலுக்கிறது. மேலும் முகவுரையில் "மத பேதங்கள் இருக்கலாம், மத விரோதங்கள் இருத்தலாகாது" என்ற கூற்றும் இதற்கு வலு சேர்க்கிறது. சாதி, மதங்களை உடைக்க முற்படாமல், இருக்கும் சாதியைக் காப்பாற்றி, வர்ணத்தின் படிநிலைகளில் உயர்த்த நினைப்பது ஒருவகை வர்ண மனோபாவமாகவே இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும் சமூக விடுதலைக்கான வித்தை தனது சிறுகதைகளில் பாய்ச்சி இருக்கிறார் என்பது நிதர்சனமே.

சிறுகதையின் வடிவம்

பாரதியின் சமகாலத்தில் சிறுகதைக்கான இடம் தோன்றாத நிலை நிலவியது. பாரதி தமிழ் படைப்புச் சூழலில் இச்சிறுகதைப் பொருண்மையைக் கையில் எடுக்கிறார். ஆனால், படைப்பின் வடிவத்தைக் கட்டமைக்க பாரதி முனையவில்லை. சிறுகதையின் வடிவத்தைத் தொடங்கியவர் பாரதி. ஆனால், ஏனோ தமிழ்ச் சமூகம் சிறுகதையின் களத்தில் பாரதியை வைக்க மறந்தே அல்லது மறுத்தே வந்திருக்கிறது. குறிப்பாக சி.சு.செல்லப்பாவின் "தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது" என்ற நூலும் சிறுகதை வரலாற்றில் பாரதியை மறந்தே வந்திருக்கிறது. 'குளத்தங்கரை அரசமரம்' எழுதப்படுவதற்கு ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னரே பாரதி எழுதிய 'ஆறிலொரு பங்கு' சிறுகதையை நாம் முன்னோடியாகக் கருத இடமிருக்கிறது. தாகூரின் கதைகளை மொழிபெயர்த்த தாக்கத்தால் பாரதியும் சிறுகதை எழுத ஆட்பட்டிருக்கலாம். பாரதியின் படைப்புகள் தேசிய, சமூக, சமுதாய ஈடுபாடு உடையதாகவே இருப்பதை உணர முடிகிறது.

நவீனத் தமிழ்ச் சிறுகதைகளின் வரலாறு ஆரம்ப நிலையில் குழம்பி கிடந்ததையாகவே தெரிகிறது. "1905 - லேயே, அவர் ஷெல்லிதாஸ் என்ற பெயரில் சக்கரவர்த்தினியில் 'துளஸீபாயி' என்ற 'ரஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்' என்ற புனைவை எழுதி இருந்தார்". (மாலன்; ஆழியச் சுடர்கள்; இணைய இதழ்; தமிழின் முதல்

சிறுகதை எது? ; 2011) இத்தகைய கூற்றுகள் தமிழின் சிறுகதை முன்னோடி பாரதி என்பதை உணர்த்துகிறது.

1910 - ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவர் புதுச்சேரியில் வசித்தபோது 'ஆறில் ஒரு பங்கு ஒர் சிறிய கதை' என்ற நூலை தன் சொந்த முயற்சியில் வெளியிட்டதாகத் தெரிகிறது. பாரதியின் கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிக்கின்றதேயன்றி உணர்வு நிலையைக் காட்டுவனவாக இல்லை என்ற வாதமும் கவனிக்கத்தக்கது. பார்வையை பிற்கால ஐரோப்பியச் சிறுகதை இலக்கண வாதிகளின் பார்வையாக இருக்கலாம். ஆனால், சிறுகதைக்கான களத்தை தமிழ் இலக்கியச் சூழலில் முன்னெடுத்த எடுத்தவர் பாரதி என்பதை மறுப்பதற்கில்லை. 'ஆறில் ஒரு பங்கு' என்ற 'சிறிய கதை' என்பதால் சிறுகதை என்ற பார்வை ஒரு சிலரிடம் 'குறுநாவல்' என்னும் போக்கில் சிறுகதை, நாவல் என்ற வடிவத்தைத் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகம் செய்தவர் பாரதி என்பதை காலம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

பி. மகாதேவன் கூற்றாக "தற்கால தமிழ் இலக்கியத்திற்கும் பாரதியார் விடிவெள்ளி. ஏனெனில், அவரே வழக்கத்திலிருந்த கதை அமைப்பை மாற்றி, வாழ்க்கையின் அன்றாட சம்பவங்கள் குறித்து எழுத ஆரம்பித்தார்'. (பிரேமா நந்தகுமார்; பாரதியார்; 2013; 108) அன்றாட வாழ்க்கையைச் சித்தரிக்கும் வழக்கத்தை தொடங்கி வைத்தவர் பாரதி. பாரதியின் இத்தகைய போக்கின் நீட்சியே 'சமகால தன் வரலாற்று நாவலின்' வளர்ச்சி எனலாம்.

ஆறில் ஒரு பங்கு

"ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்திலேயே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம். மத விரோதங்கள் இருக்கலாகாது. இந்த உணர்வை நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும். "நாநீய பந்தா வர்த்ததே அபநாய" வேறு வழியில்லை.

இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன். (சி. சுப்பிரமணிய பாரதி; பாரதியார் கட்டுரைகள்; 2007; 346) அத்தியாயம் 5 வரை இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

'ஆறில் ஒரு பங்கு' கதையை தன்னிலையில் எழுதியுள்ள கதையாகும். 'மத பேதங்கள் இருக்கலாம்' 'வைசிய சகோதரர்கள்' என்னும் சொல்லாட்சியின் வழி பாரதிகான வர்க்க கட்டமைப்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆறில் ஒரு பங்கின் கதைக்களம்

பாரதியின் 'ஆறில் ஒரு பங்கு' கதைக்களம் ஐந்து அத்தியாயங்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஒரு நாவலுக்கான இடத்தை இப்படைப்பு தொடங்கி வைக்கிறது. இக்கதையின் முகவுரை அடித்தள மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்கிறது. எனவே, இக் கதையின் களமும் சுதந்திரம், சாதியத்திற்கு எதிரான கருத்தியலைக் களமாகக் கொண்டுள்ளதை புரிந்து கொள்ளலாம்.

தஞ்சையில் தொடங்கி சென்னை வழியே காதல் பாதை நீள்கிறது. கதைக்கான களமாக தஞ்சை, சென்னை, கல்கத்தா, வங்காளம், பஞ்சாப், காசி, நர்வா, கோசல நாடு என பாரத தேசத்தின் எல்லைகளை களமாகக் கொண்டிருக்கிறது 'ஆறில் ஒரு பங்கு' கதைக்களம்.

ஆறில் ஒரு பங்கு - கருத்து

காதல் வழியே தேசிய நிலைப்பாட்டை பேசுகிறது. கதையின் கருவாக நாயகனை தேச விடுதலைக்கான பாத்திரமாகவும், நாயகியை சாதிய விடுதலைக்கான பாத்திரமாக கதையில் உலாவ விட்டிருக்கிறார். தீண்டாமையைக் கண்டிக்கும் போக்கும் பாத்திரங்களின் வழியே பாரதி பேசுகிறார். அதன் முறையே, "தணிந்த வகுப்பினரும் நன்மை தீமைகளிலே, நமது நாட்டில் உயர்ந்த வகுப்பினர் என்று கூறப்படுவோர் எவ்வளவு தூரம் சிரத்தையும், அன்னியத் தன்மையும் பாராட்டுகிறார்கள் என்பதை நோக்குமிடத்து எனது உள்ளத்தில் மிகுந்த தளர்ச்சி உண்டாயிற்று. தென்னாட்டை போலவே வடநாட்டிலும் கடைசி வகுப்பினர் என்பதாகவே சிலர் கருதப்படுகின்றனர். தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும், இந்த வகுப்பினர் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே கை கொண்டிருக்கின்றார்கள். உழவுத் தொழில் உடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்கள் ஆகவேண்டும்". (சுப்பிரமணிய பாரதி; பாரதியார் கட்டுரைகள்; 2007; 362) இக்கூற்று பாரதியின் சமூக கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ள ஏதுவாகிறது. இக்கதைக்களம் தென்னாட்டு, வடநாட்டின் சாதியப் படிநிலைகளை புலப்படுத்துவதற்காக நாயகனை பாரத தேசம் வலம் வரச் செய்திருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்', நாம் பள்ளர், பறையருக்குச் செய்ததையெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள் என்பதை பாரதி சுட்டிக்காட்டுகிறார்.

“கோ மாமிசம் உண்ணாதபடி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, அவர்களை நமது சமூகத்திலே சேர்த்து அவர்களுக்குக் கல்வியுஞ் தர்மமுஞ் தெய்வமும் கொடுத்து நாமே ஆதரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் எல்லோரும் நமக்குப் பரிபூரண விரோதிகளாக மாறி விடுவார்கள். (சுப்பிரமணிய பாரதி; பாரதியார் கட்டுரைகள்; 2007; 364) நால் வர்ணத்தில் ஒருவராக பாரதி தன் கருத்தை புலப்படுத்துவதாக தெரிகிறதே தவிர, சாதிகளே இல்லை என்ற கருத்தியலில் இருப்பதாக தெரியவில்லை. மாட்டிறைச்சி தின்பதால் இந்து ஜாதி இவர்களைத் தாழ்வாக கருதுகிறது என்பதை பாரதியும் ஏற்றுக்கொள்பவராகவே தெரிகிறது. ‘பஞ்சத்தில் பெரும்பாலும் பள்ளர், பறையர் வகுப்பினரே மடிந்து போகிறார்கள்’ என்ற வாதத்தை பாரதியே இக்கதையின் வழி முன்வைக்கிறார். இத்தகைய பின்னணியிலே ‘ஆறில் ஒரு பங்கு’ உள்ள தீண்டாதார் மதம் மாறும் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடாது என்ற பாரதியின் நோக்கத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

பாரதியின் நடை

பாரதியின் நடை எள்ளல் நடை கொண்டது என்பதை அனைவரும் அறிவோம். அதன் முறையே, “வயிற்றிலே சோற்றைப் போட்டுக் கைக்கழுவிக் கொண்டிருக்கும் போதே, குறட்டை விட்டுக் கொண்டிருப்பாள் என்ற நகைப்பு மொழியும், “குறட்டை நாயுடு கதவை உடைத்து, உள்ளிருக்கும் குறட்டைகளை எல்லாம் எழுப்பி, மேலே வந்து படுத்து அரை நாழிகைக்கெல்லாம் தமது தொழிலை ஆரம்பித்து விட்டார்” என்ற ஏசல் மொழியும் கதை கட்டமைப்பை வலுவூட்டுகிறது.

வாசகனுடன் படைப்பாளன் நேரடியாகப் பேசுவது

பாரதி தன் கதைப் போக்கின் நடுவே வாசகனிடம் படைப்பாளர் நேரடியாகப் பேசுவது என்ற முறையை பாரதி கையாண்டுள்ளார். அதன் முறையே இப்பொழுதுதான் நாங்கள் புதிதாகத் தனியிடத்திலே சந்தித்திருக்கிறோம் என்றும், அதனால் இங்கு நீண்டதோர் காதல் வர்ணனை எழுதப்படும் என்றும் படிப்பவர்கள் எதிர்பார்க்க வேண்டாம்”. (2007; பக்கம்; 351)

“மத விஷயங்களைப் பற்றி விஸ்தாரமான விவகாரங்கள் எழுதி, படிப்பவர்களுக்கு நான் தலைநோவு உண்டாக்கப் போவதில்லை. சுருக்கம்” (2007; 346) இத்தகைய கூற்றுகள் பாரதியின் கதைப் போக்கை உணர்த்துகிறது. ‘ஆறில் ஒரு பங்கு’ கதைக்கான வெளி என்பதைக் காட்டிலும், பாரதி சுய வாழ்வு சார்ந்த பதிவாகவே யூகிக்கத் தோன்றுகிறது. பாரதி சமூகத்தை எதிர்கொண்ட மனோபாவத்தை காட்டுவதாகவே இக்கதைக் களத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை

'ஆறில் ஒரு பங்கு' என்ற கதை சாதி பேதங்களை ஒழித்து, பிரம்மச்சரியம் காத்து தேசத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் எனக் கூறுகிறது. பாரதி நாயகனைத் தேசமெங்கும் சுற்ற வைத்து நமக்குப் பாரதத்தின் சிறப்புகளை எடுத்துக் காட்டுகிறார். 'ஆறில் ஒரு பங்கு' என்ற தலைப்பு ஹரிஜனங்களைக் குறிப்பிடுகிறது. நாயகி தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுகிறாள். நாயகன் அரசியல் சுதந்திரத்திற்கான வந்தேமாதர கோஷத்துடன் கதையில் வலம் வருகிறான். இப்படி கதை நகர்த்தப்பட்டாலும், நால் வர்ணங்களை உடைத்து, கீழ், மேல் பேதங்களைப் போக்குவதாக தெரியவில்லை. நால்வர்ணங்களைக் காப்பாற்றி சாதி இல்லை என்ற அபத்தத்தை மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது.

தொகுப்புரை

- ஆறில் ஒரு பங்கு சிறுகதை சாதிய ஒடுக்குமுறையை கேள்வி எழுப்புகிறது.
- உழவுத் தொழில் புரியும் பள்ளர், பறையர் இவர்களை வைசியர்களாக உயர்த்த முனையும் போக்கு சிறுகதையில் தென்படுகிறது.
- பாரத தேசத்தின் பெரும் பகுதியை இச்சிறுகதை கடத்துகிறது.
- தமிழ் சிறுகதையின் முன்னோடியாக பாரதி அறியப்படுகிறார்.

துணைநூற்பட்டியல்

1. சி. சுப்பிரமணிய பாரதி - பாரதியார் கட்டுரைகள், கவிதா பப்ளிகேஷன், பாண்டிபஜார், தி.நகர், சென்னை-17. 2007.
2. பிரேமா நந்தகுமார் - பாரதியார் (தமிழாக்கம்), இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்திய அகாதமி, 2013.
3. மாலன் - தமிழின் முதல் சிறுகதை எது?, ஆழியச்சுடர்கள், இணைய இதழ், 2011.

REFERENCES

1. Si.Subramaniya Bharathi - bharathiyar katturaigal, kavitha publications, pondy bazaar, t.nagar, Chennai - 17, 2007.
2. Prema Nandhakumar - Bharathiyar (Tamil Translate), Indhiya Ilakkiya Sirpigal, Sagithya Acadamy, 2013.
3. Malan - Thamizh Muthal Sirukadhai Yethu? , Aazhiyasudargal, Inaiya Ithazh, 2011.